# பாத்திமா நாயகியார் மாலை

ஆக்கம் :

ஜமாலிய்யா அஸ்ஸய்யிது
கலீல் அவ்ன் மௌலானா
அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

வெளியீடு :
அவ்னிய்யா பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
திருச்சி

பாத்திமா நாயகியார் மாலை

ஆக்கம் :

ஜமாலிய்யா அஸ்ஸய்யிது
கலீல் அவ்ன் மௌலானா
அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

வெளியீடு :
அவ்னிய்யா பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
திருச்சி

# பாத்திமா நாயகியார் மாலை

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜூத், ஜமாலிய்யா

**அஸ்ஸையித் கலீல் அவ்ன்**

அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்

மௌலானா

வெளியீடு

**அவ்னிய்யா பதிப்பகம்**

ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம்

சீத்தப்பட்டி பிரிவு. பூலாங்குளத்துப்பட்டி அஞ்சல்,

(ஜே.ஜே. பொறியியல் கல்லூரி அருகில்)

மணப்பாறை ரோடு, திருச்சி -620009

கைபேசி : 96595 04855

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாத்திமா நாயகியார் மாலை |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | கவிதை |
| நூலாசிரியர் | : | ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு ஆண்டு | : | 2015 |
| பக்கங்கள் | : | 44 |
| தாள் | : | 21. மேப்லித்தோ |
| நூல் அளவு | : | கிரவுன் |
| நூலின் விலை | : | ரூ. [redacted] 100/= |
| அச்சுக்கோவை | : | ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட்<br>229/4, மேற்குரத வீதி,<br>திண்டுக்கல் 624001.<br>கைபேசி: 99445 76165. |
| அச்சிட்டோர் | : | அவ்னிய்யா பதிப்பகம்<br>ஜாமிஆ யாஸீன்அறபுக் கல்லூரி<br>J.J.பொறியியல் கல்லூரி அருகில்<br>மணப்பாறை ரோடு,<br>திருச்சி -620009<br>கைபேசி : 96595 04855 |



# பதிப்புரை

காத்தம் நபிகளார் - கதீஜா பிராட்டியாரின் கண்ணிய மகளார் பாத்திமா நாயகி (ரலி).

அவர்கள் சுவனத்துப் பெண்களின் சுந்தரத் தலைவி.

அறிவின் தலைவாயில் அலிப்புலியாரின் அருமை மனைவி.

இமாம் ஹஸன் ஹுஸைனாரின் அன்பு அன்னை.

உலக முஸ்லிம்கள்- முஃமின்கள் - தங்கள் உள்ளத்தில் உயிராய் வைத்துப்போற்றும் உன்னத உத்தமி.

அவர்களைப் பாடாத கவிஞர்கள் இல்லை; அன்னையாரைப் போற்றாத புலவர்கள் இல்லை.

பாத்திமா நாயகியார் (ரலி) அவர்கள் மீது அவர்களின் பேரர் குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜூத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் அழகிய தமிழ் மாலையொன்று பாடிப் பரவியுள்ளார்கள்.

ரஸூல் மாலை - முஹிய்யுத்தீன் மாலை போன்று அன்றாடம் வீடுகளில் ஓதவும், மௌலிது மஜ்லிஸ்களில் பாடிப் பயன் பெறவும் வாய்ப்பாக அமைந்த இம்மாலை தமிழ் பேசும் நாவுகளில் தவழ்ந்து மணம் பரப்புமாக!

இந்நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பினை பேரார்வத்துடன் வேண்டிப் பெற்றுக்கொண்ட ஆத்ம சகோதரர் , திண்டுக்கல் ஜனாப், அப்பாஸ் முஹம்மது ஷாஜஹான் பி.எஸ்.ஸி ஹக்கிய்யுல் காதிரிய் (கேம்ப் துபை) அவர்களுக்கு சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பும் துஆவும் என்றும் பொழியுமாக!

## முன்னுரை

புவியின் முடி சூடா மன்னர் எம்பெருமானாரின் அருமை மகளார் பாத்திமா நாயகியாரின் திருச்சரிதம் எழுதியுள்ளோம். கவனமாய் இதைப் பாடிவரின் நற்குணங்களும் நல்லெண்ணங்களும் வாழ்வு முறைகளும் இதிலிருந்து மனதிற் பதிவாகி மக்கள் நல்லவராய் வாழ வழி வகுக்கும். நலம் பெருகும். இதை இழிப்போர்க்கு வலிப்பே ஏற்படும். நன்மைகள் கிட்டா. தீமையே உருப்படும். ஆதலால் விருப்புடன் பாடுங்கள்.

இந்நூலை ஆக்கித் தருமாறு சென்னையில் வதியும் A. ஜமால் முஹம்மது அவர்கள் மனைவியார் A.சாலிஹா மர்யம் கேட்டுக் கொண்டமைக் கிணங்கவே இதைச் செய்தோம்.

அவர்கள் சீருடனும் சிறப்புடனும் எல்லா வளங்களும் பெற்று இனிதே வாழ்க வென வழுத்துகின்றோம். வாழ்க!

(ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா)



# பாத்திமா நாயகியார் மாலை

1. பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீ மென்றோதி
இஸ்லாத்தின் நாயகியை இனிதாய் புகழ்வோமே.

2. எல்லாப்பு கழினையும் இறையோற் குரித்தாக்கி
வல்லார் நபீமீது வாகாய் ஸலாத்துரைப்போம்

3. மற்றும் கிளையார்கள் மணமான ஸஹ்பு மீதும்
பற்றாகக் கூறுகிறோம் பதியே யருள் புரிவாய்

4. ஆலமடங் களுக்கும் அதிபதியாய் வந்துதித்து
நீலக்கடற் சூழுலகை நேராக்கி வைத்தார்கள்

5. விலங்குகளும் மாந்தர்களும் வேறுஜின்கள் கற்கரடும்
மலாஇகா மாரவரும் மண்விண்கால் நீர் நெருப்பும்

6. மதியிரவி மற்றுமுள்ள மண்டலங்கள் கோளங்களும்
அதிபதியாம் மாநபிக்கு அடங்கி நடந்தனவே.

7. மண்ணே ழடுக்குகளும் விண்ணே ழடுக்குகளும்
கண்ணாகப் போற்றிநின்ற காஸீம்நபி யைத்துதிப்போம்

8. இதுநிற்க வெடுத்துக் கொண்ட இனியநபி தம்மகளார்
மதிமிக்க பாத்திமத்து வண்ணமகள் காதைசொல்வாம்.

9. தீயவர்கள் தூற்றுவார்கள் தூயவர்கள் போற்றுவார்கள்
நாயகி பாத்திமத்தை நாம்போற்றிப் புகழ்வோமே.

10. பாத்திமா நாயகியைப் பரிவாய் வளர்த்தநபி
மாத்துயர்கள் வந்திடாமல் மனங்கலங்க வைக்காமல்

11. நேமமாய் வாழும்வழி நேர்படுத்தி வைத்தார்கள்
தீமைகள் சேராமல் தீயவைக எண்டாமல்

12. தூயவழி யில்வளர்ந்தார் தூதர்மகள் பாத்திமத்தே
ஆயும் வணக்கமெல்லாம் அழகாகச் செய்துவந்தார்.

13. நாயகத் திருமேனி நபிப்பட்டம் பெறுவதற்கு
ஆயவைந் தாண்டுக்குமுன் னவதரித்தார் பாத்திமத்தே

14. அவ்வாண்டிற் றான்கஃபா ஆண்டுடைந்து குரைஷியர்கள்
செவ்வைப்ப டுத்தினார்கள் சீராய்வ ணங்கிடற்கு

15. கதீஜா நாயகியார் கனிவான பாத்திமத்தை
கதியென்னப் பெற்றெடுத்தார் கருத்தா வருளாலே



16. பாத்திமா நாயகியார் பரிவாய்ப் பிறந்தவன்றிற்
கோத்திரங்கள் கேடுகெட்டுக் குறைகுற்ற முற்றார்கள்

17. கொலைசூது கொடுநடத்தை கொடுங்கொள்ளை சுடுவார்த்தை
சிலைவணக்க மற்றுமெல்லாம் தினமும் நடந்தனகாண்.

18. மாதர்தம்மை அடிமைகளாய் மனம்போன போக்கிலெல்லாம்
வேதனைகள் செய்துவிலை மாதுகளாய் வைத்துவந்தார்

19. நீதிகெட நடந்துகொண்டார் நீசமக்கட் கூட்டமெல்லாம்
தீதார்ந்த வக்காலை சீர்குழந்தை பிறந்ததம்மா.

20. திருநபியுந் தம்மினத்தார் திருந்தி இறைவழுத்தி
கருத்தாவை வணங்கிநின்றார் கனிவோடு காலமெல்லாம்

21. நபிநாதர் கோத்திரமாம் ஆண்பெண்கள் யாவருமே
தபமிக்கா ரென்றுமக்கள் சதமும் புகழ்ந்துரைத்தார்

22. நாயக மவர்களுடன் நல்லார் கதீஜாவும்
தூயநல் வாழ்வதனில் துய்த்தே இருந்தார்கள்.

23. ஆயத் தெளிந்தவராம் அருமை கதீஜாவும்
சீய நபியவர்க்குச் சிறப்பா யுதவிசெய்தார்

24. நம்பிக்கை யுடையரென்னும் நற்பெயரா மல்அமீனும்
நம்நபிக்கே யிட்டதுபோல் நாயகிக்கு மிட்டார்கள்

25. தூயவராம் கதிஜாவுக்கு தாஹிரா என்னும்பெயர்
நேயமா யிட்டார்கள் நீதமுள்ள மானிடர்தாம்

26. அவ்வாறே நாயகியார் அருண்மிக்க பாத்திமத்தும்
செவ்வையாம் பெண்களுள்ளே சீரான மாதரானார்.

27. மழலைகளாம் பெண்மக்களை மண்ணினிலே உயிருடனே
வழமையாய்ப் புதைத்துவந்தார் மனமில்லா மாந்தர்கணம்

28. அன்பும் பண்பும் அழகா யமைந்தநபி
பெண்களுக்கு வாழ்வளித்தார் பேயர்கள் வாழுகையில்

29. பெண்களுக்குப் பேறளித்துப் பெருமை யடையச்செய்த
கண்மணி பாத்திமத்தைக் கணந்தோறும் போற்றிடுவோம்.

30. உயிர்நாதர் கொடும்பகைஞர் உதுபாஷை பாரபீ ஆ
துயரடையும் உக்பாவலீத் சுயமறியா அபூஜஹலும்



31. மற்றுமுமய் யாஹலபும் மதியில்லா விவர்களெல்லாம்
குற்றமுள்ள வெண்ணத்துடன் குறையில்லா நாயகந்தான்

32. தொழுகையில் ஸஜதாவில் தொடர்ந்தே யிருக்கையிலே
கழிவான ஒட்டைக்குடர் கழுத்தினிலே போட்டிடவே

33. இழிவான முடிவெடுத்தான் ஈரமில்லா அபூஜஹ்லே
எழிலாகச் செய்திடினே யெவ்வளவா னந்தமென்றான்

34. அவ்வாறு நிகழுங்கால் அன்றேபோல் கஃபாவில்
செவ்வையாய் ஸஜதாவும் செய்கையிலே நபி முதுகில்

35. ஒட்டைக் குடரெடுத்து ஒளிவின்றிப் போட்டிடவே
திட்டம் வகுத்தனரே தீதுறையும் குப்பாரே.

36. வலீதிப்னு உத்பாவும் வழிகெட்ட முஹைறாவும்
இழிவுற்ற காபிர்களாம் இறைநபியி னெதிரிகளாம்

37. சாந்திநபி நாயகந்தான் ஸஜதாவி லிருக்கையிலே
பாந்தளென நஞ்சுகொட்டும் பகைவன் உக்பாவே

38. ஓடியோடிச் சென்றாங்கு ஒட்டை யறுத்தவிடம்
தேடித்தேடி யிரைப்பையை தீவிரமா யெடுத்துவந்தான்.

39. உக்பாவெனும் சாத்தான் உடனே யுறுதிகொண்டான்
தக்கசமயம் பார்த்து தானேகுடர் கொணர்ந்தான்

40. தூயநபி நாயகத்தின் தூய்மைத் திருமுதுகில்
தோயவே போட்டானே துணிவாயக் காபிருதான்.

41. சத்தியத் தூதரவர் ஸஜதாவி லிருக்கையிலே
புத்திகெட்ட உக்பாதான் போட்டான் முதுகினிலே.

42. தலைதூக்கி நிற்கவுமே தகையில்லா நாயகந்தான்
களைத்தே ஸஜதாவில் கணநேர மிருந்தார்கள்.

43. வினையறிந்த தம்மகளார் வேதனை கொண்டுடனே
கணைபோலு மோடிவந்து கனமான வக்குடரை

44. அகற்றி யெறிந்தார்கள் அருமைமகள் மெல்ல மெல்ல
முகம்தூக்கி யெழுந்து முனிந்தே சபித்தார்கள்.

45. கண்டோ ரெவரும் கைகொட்டி மிகிழ்ந்தனராம்
கிண்டல்களும் செய்தனராம் கேடு விளைந்திடவே

46. நாயகமே தலைதூக்கி நலமாய்நி மிர்ந்துநின்று
நாயனையே வேண்டிநின்றார் நயவஞ்சகர் சாக



47. தந்தையி னுயிர்மகளார் தாவில்லா பாத்திமத்து
விந்தையாய்த் தந்தையினை விதந்தோதி வாழ்த்தி வந்தார்

48. நந்தா வருள்விளக்கே நனிநல்ல பாத்திமத்தே
விந்தைகள் மிக்கவரே தந்தையின் பேரருளே.

49. செய்த்தான்கள் செய்த சீரற்ற செயல்களினால்
செய்யவழி யில்லாது செத்தார்கள் பதுரினிலே

50. அல்லாவின் பேரருளால் அனைத்தாய காபிர்களும்
அல்லலுற்று பதுருனிலே அவமாய ழிந்தனரே.

51. மக்கத்தில் வாழ்ந்தபோது வனிதையர் துன்பமுற்ற
துக்கமெல்லாம் சொல்வதற்கு யார்தான் வருவாரோ.

52. துயரத்தி லாழ்ந்திருந்த தூயபாத்தி மாபதூலை
தயவா யழைத்துச்சென்றார் தனியா னருளாலே

53. அயராது தொண்டுசெய்த அலியா ரவர்தமையும்
அயர்நீக்க அழைத்துச்சென்றார் அன்பான நபியவர்தாம்

54. நபிநாதர் திருமதீனா நகருக்க ழைத்தபோதில்
சுபமாக நாயகியார் துயர்நீத்து வாழ்ந்தனரே.

55. துன்பந் துயரினிலே துய்த்திருந்த தூயமகள்
இன்பந்தி ளைத் தஞ்சா தினிதாக வாழ்ந்து வந்தார்.

56. காலம் போகப்போகக் கருணைநபி நன்மகளார்
வாலைவய தெய்தினார்கள் வரிசையாய் வளம்பெறவே

57. பிரபஞ்ச விரட்சகரின் பேறான மகளாரும்
திருமணத்தின் எல்லையினைச் சிறப்பா யடைந்தார்கள்.

58. அவ்வா றிருக்கையிலே அருமையாந் திருமகட்கு
செவ்வைசால் நற்சிலரும் திருமணமே பேசிவந்தார்.

59. பண்பான நபியவர்கள் பணிவான நாயகிக்கு
நன்மணந்தான் பிடித்தவர்க்கு நடத்திடவே நாடினார்கள்

60. மும்மை உணர்ந்தவர்கள் முழுமை யறிந்தவர்கள்
இம்மைக் கிவர்பொருந்தார் என்றே இசைந்திலரே.

61. அவணேகிப் பெரியர்சிலர் அலியவர்கள் தம்மிடத்தே
புவனத்தின் நாயகரின் புதல்விதனைக் கேட்கச் சொன்னார்

62. ஐயையோ யானேகேன் அதிவெட்கப் படுகின்றேன்
வையத்து நபிமுன்னே மணங்கேட்க யானெவணோ.



63. இதிலென்ன வெட்கப்பட எஃதொன்று மில்லையென
பதிநாத ரிடஞ்சென்று பகர்ந்திடுக வென்றார்கள்.

64. சொற்கேட்டுச் சூரரலி சோர்வின்றி யாங்குச் சென்றார்.
நற்செயலும் முடிவதற்கு நாயகனைத் துதித்து நின்றார்.

65. தயங்கித் தயங்கித் தாழ்மையா யிருக்கையிலே
மயல்கொள் அலியிடத்து வந்தவகை கேட்டறிந்தார்.

66. தாரணி யாளும்நபி தம்மகளார் பாத்திமத்தை
பூரண விருப்புடனும் பொலிவுடனும் கேட்டுநின்றார்.

67. தமியேன்யா னிங்குவந்தேன் தாங்கள்மகள் பாத்திமாவை
இமைபோலக் காத்திடுவேன் இன்மணமே புரிதற்கென்றார்

68. மகளாரை யணுகி மணச்செய்தி கேட்டார்கள்
இகழாது வெட்கங்கொண்டார் இனிதாகச் சம்மதித்தார்.

69. ஈது நிகழ்கையிலே இனியார் ஜிபுரீலும்
தூது கொணர்ந்தார்கள் தூயோன் விரும்பினனே

70. பாத்திமா நாயகியைப் பரிந்தே அலியவர்க்கு
ஏத்தி மணமுடிக்க இறைத்தூதும் வந்ததுவே.

71. என்றுரைத்தே அனஸை யனைவர்க்கும் மறிவிக்கவே
சொன்னார்கள் நபிபெருமார் சென்றே அழைத்தார்கள்.

72. அபூபக்க ருமரும் அன்பான தல்ஹாவும்
தபவழி வாழ்முஹாஜிர் தகைமையுள்ள அன்ஸார்கள்

73. தல்ஹா துபைரைத் தயவா யழைத்துவர
நல்லா ரனஸவரை நம்நபிக ளனுப்பிவைத்தார்.

74. எல்லாரும் வந்தார்கள் ஏற்றமுடன் வந்தார்கள்
வல்லாரலி தங்கள் மணக்காட்சி காண்பதற்கே.

75. சோபனம் கூறிவந்தார் சுபமான நல்வினைக்கு
சோபனம் சோபனம் சோபனம் சோபனமே.

76. வந்தாரை வரவழைத்து வரிசைகள் செய்துபின்னர்
உந்திவரு முவகையுடன் உருமணத்தைத் தொடங்கினரே
*(உரு: எழில்)*

77. எல்லாரு மிருக்கையிலே ஏந்தல்நபி குதுபாஓதி
நல்லாரலி நாணயங்கள் நானூறு மஹரீந்தார்.

78. அருமகளா ருத்தமியா ரணிமகளார் பாத்திமத்தின்
திருமணத்தின் குதுபாவாம் சீரான பிரசங்கம்



79. கண்மணியாம் நாயகமே களங்கமறச் செய்துபின்னர்
மின்மகட்கு நானூறு மிஸ்கால் அலிகொடுத்தார்.

80. ஒருதட்டி லீத்தம்பழம் உள்ளார்க்குப் பகிர்ந்தார்கள்
பெருமானார் செய்தவிந்த பேறாம் திருமணத்தில்.

81. எதுவுமுண்டோ வுங்களிடத் தென்றுநபி கேட்கையிலே
இதமான கவசமொன்றும் ஏறுபரி தானுமுண்டு,

82. என்றார்கள் அலியவர்கள் இதுதன்னை விற்றுப்பின்னர்
நன்றாகப் பணம்கொணர்க என்றனரே நபியவர்கள்

83. அலியாரிடத் திருந்த அந்தக் கவசந்தனை
ஒளியான உதுமானிடம் உரிமையாய் விற்றார்கள்

84. கண்ணிய உதுமான்(ரலி) கனிவாக நானூறும்
எண்பது திர்ஹத்தினை யினிதாயே ஈந்தார்கள்.

85. இதனைக் கொணர்ந்தே யினியநபி யிருகரத்தில்
மதிமிக்க அலியவர்கள் மனமுடனே ஈந்தார்கள்.

86. மணப்பொருள்கள் வாங்கிவர மதிமிக்க பிலாலிடத்து
பணம்சிலவும் கொடுத்தார்கள் பதமாயே வாங்கிடற்கு

87. உம்முஸல்மா வென்பவரும் உரியபொருள்
கள்கொணர்ந்தார்
தம்மகளைக் கொழுநனுடன் தனிவாய் அனுப்புதற்கே

88. வலிமா நடத்திடவே வள்ளல்நபி ஆணையிட்டார்
அலி(ரலி) யவர்கள் அழகாய்வி ருந்தளித்தார்.

89. திசையெல்லாம் மணக்கத் திருமணமே முடிந்த பின்பு
இசைந்தே அலியவர்க ளினியவிருந் தளித்தார்கள்.

90. கோதுமை ரொட்டி கோதற்ற ஈத்தங்கனி
சீதமுள்ள பாற்கட்டி சிறந்த குழம்புவகை,

91. இனிதாகக் கொடுத்தார்கள் இன்பமுட னுண்டனரே
புனிதமான வலீமாவை புவியோரும் போற்றினரே

92. விண்ணும் மண்ணும் வேறுள்ள பொருள்களெலாம்
திண்ணவராம் பண்பான தீரரலி போற்றினரே.

93. மீதலமும் பூதலமும் பாதலமாம் மாதலங்கள்
மாதவராம் வேததூதர் மாமகளை போற்றினரே.

94. வேதியரும் தூதுவரும் மாதவரும் நீதவரும்
வேதநபி நன்மகளை வீரரலியைப் புகழ்ந்தார்.



95. தீரரலியவர்கள் திருமணமும் ஹிஜ்ரி ரண்டில்
சீராக ரமழானில் சிறப்பாக நடந்ததுதான்.

96. அப்போ தலியார்க்கோ ஆயவய திருபதாகும்
ஒப்பில்லா நாயகிக்கோ உற்றவய துமூவைந்து.

97. சீதனப் பொருள்களென சிறந்தநபி தம்மகட்கு
நீதமுடன் கொடுத்தவைகள் நிறைவாகச் சொல்லுகிறேன்

98. சீதனமாய் மூங்கிற்கட்டில் சீர்பூத்த மட்கலங்கள்
தீதற்ற வீத்தவிலை திணித்தேயொரு தோன் மெத்தை

99. தண்ணீர் கொணரத் தனியேயொரு தோற்பையும்
வண்ணக்கர மியற்ற மற்றுமம்மி திரிகற்கள்.

100. ஈந்தார்கள் பெருமானார் இனிய மகளார்க்குச்
சாந்திநபி கொடுத்த சன்மானம் கண்டுகொள்வோம்.

101. இறையோனே இத்தகைய இன்செயல்கள் செய்திடவே
குறையறவே எமக்கருள்வாய் குணத்தோனே அல்லாஹ்வே.

102. திருமணம் நடக்கையிலே தீரரலி பெருமேழை
திருவிறையும் நபியுமல்லால் தேர்ந்தபொருள்
யாதுமில்லை.

103. புறப்பட்டுச் செல்லுகையில் பூவையர் தலைவியராம்
கரையில்லா நாயகியார் கண்ணீர் வடித்தார்கள்

104. தந்தைதம்மை விட்டுத் தனியே அலியுடனே
சிந்தை கலங்கிடவே செல்ல விருக்கையிலே,

105. கண்கலங்கி நின்றார்கள் கண்மணியார் பாத்திமத்தே
விண்மண்ணின் வேந்தர் விளித்தே மகளாரை

106. ஈரற் குலையே என்கண்ணே ஏனழுதீர்
கூறுங்க ளென்றார்கள் குறையெல்லாந் தீர்த்திடுவேன்

107. ஐயையோ வென்மகளே அறிவுள்ள நன்மதியே
உய்யவழி காட்டியபின் ஓராதே னழுகின்றீர்.

108. என்றலுமே நாயகியார் எந்தையே தாங்களின்று
ஒன்றுமில் லாதவரை ஓராது கட்டித்தந்தீர்.

109. எப்பொருளு மில்லாத இத்தகைய வர்தமக்கு
இப்போது கட்டினீர்க ளெண்ணியதைக் கண்வடித்தேன்

110. அன்பான என்மகளே ஆரார்ந்த ஸஹ்ராவே
இன்னுலகி லெல்லாம் இறையோ னிருவர்தமை



111. தேர்ந்தெடுத்தா னொருவர் தீதற்ற உங்கள்தந்தை
கூர்மதி யாருங்கள் கொழுநர் பிறிதொருவர்.

112. மற்றுமுள்ள எல்லார்தமில் மாவீரர் அலிப்புலியார்
கற்றநல்ல சன்மார்க்கக் கலைஞ ரிணையில்லார்.

113. உல்லாசங் கொள்வீர் உளத்தே மகிழ்ந்திடுமென்
றல்லா(ஹ்)வின் தூதர் அழகா யெடுத்துரைத்தார்.

114. அறிவிற் சிறந்த அலியாரைத் தந்துவந்தேன்.
குறையில்லாச் சன்மார்க்கர் குணக்குன்று அன்னவரே

115. உம்மத் தனைவரிலும் உயர்வான பெண்ணீங்கள்
தம்மக்கள் யாவருக்கும் தாயான மரியம்போல்

116. என்றார்கள் பெருமார் இனிதே மகளார்க்கு
பொன்றா மனங்களுடன் பொறுமையாய் வாழ்கவென்றார்

117. இருவரையும் அழைத்தே யினிதே பிரார்த்தனைகள்
பெருமானார் செய்தார்கள் பேறாக வாழ்வதற்கு

118. என்னினின்று முள்ளவர்கள் இவர்கள் இருவருமே
என்னைச் சுத்தப்படுத்தி என்குறைக ளற்றதுபோல்

119. இவ்விரு வர்தமையும் என்றுஞ்சுத்த மாக்கிவைப்பாய்
இவ்வாறீ ருள்ளங்களில் ஈகையன்பு வளரச்செய்வாய்

120. சீதேவித் தன்மை சிறந்த நற்பாக்கியமும்
தீதற்ற விருத்தியையும் தீரா தருள்வாயே.

121. அவர்களிடைப் பேரன்பை அநுதினமும்நிலவச் செய்வாய்
அவர்கள்தம் கிளையார்க்கும் அன்பையே ஈந்தருள்வாய்

122. உலகத்தி னரும்பொருளாம் உண்மையின்பிறப்பிடமாம்
நலமிக்க நாயகமே நலனுக்கு வேண்டினரே.

123. பாத்திமா நாயகியார் பண்பான ஐவர்தமை
ஏத்தும்குழந் தைகளாய் இனிதாகப் பெற்றெடுத்தார்.

124. முறையான ஹஸன்ஹுஸைனும் முஹ்ஸீனும்
உம்முகுல்தூம்
நிறைவான ஸைனபையும் நிமலன்றா னருளினனே.

125. மூன்றாம் ஹிஜிரியிலே முறையாக ஹஸன்பிறந்தார்
ஈன்றவிது கேட்டவுடன் இனியரஸூல் ஆங்குச்சென்றார்.

126. நல்லபெய ராம்ஹஸனை நலமாகச் சூட்டினின்றார்.
சொல்லியநா ளேழதனில் சீரான ஈராடுகள்



127. அறுத்தே யகீகாவை அழகாக வீந்தார்கள்
நிறுத்துக் களைந்த நிரைகொண்ட மயிரினுக்குச்

128. சமமாக வெள்ளியினைத் தானமாய்க் கொடுத்தார்கள்.
எமதுயிர்ப் பிள்ளைஹஸன் எழிலான செய்யிதவர்

129. என்றார்க ளருமைநபி என்றென்று மழியாதே
என்றுமவர் சந்ததிக்கும் இந்நாம மழியாதே.

130. பெருமானார் நாயத்தின் பெருமை உடல்வடிவு
அரியஹஸன் தம்மினிலே அழகா யிருந்ததுகாண்

131. அருமைஹுஸைன் ரலியும் அரிய ஷஉபானில்
திருவான ஹிஜ்ரியாண்டு சீர்நான்கிற் பிறந்தார்கள்

132. செய்தியது கேட்டவுடன் சீர்நாதர் விரைந்தார்கள்
செய்ய குழந்தையதன் செவிதன்னில் சீராக,

133. பாங்குசொல்லி ஊதினார்கள் பயகாம்பர் வாயினாலே
பாங்கா யகீகாவும் பைம்முடிக்கு வெள்ளியதும்

134. முன்போற் கொடுத்திடவே முறையாய்ப் பணித்தார்கள்
அன்னணமே செய்தார்கள் அன்பான குழவியுக்கு.

135. காலஞ்செல்லச் செல்லக் கனிவான இன்சொல்லும்
ஞாலமதிற் குறுநடையும் நலமான சிற்றோட்டமும்

136. போட்டவர்கள் ஆங்குமீங்கும் போகவர விருந்தார்கள்
தேட்டமா யவர்களையே தேடிநபி போவார்கள்.

137. அண்ணல் நபி யவர்கள் அன்பான மகளாரின்
பண்ணான வில்லினுக்குப் பரிவாகச் செல்வார்கள்.

138. ஆங்கே குழந்தைகளை அணித்தாகக் காண்கிலரால்
யாங்கென்று வினவப்பின் யாவருமே ஓடிவந்தார்.

139. வந்தவர்கள் நாயகத்தை வலிதாகப் பற்றிக் கொண்டு
அந்தமில்லா அன்புடனே அணைத்தே மகிழ்ந்தார்கள்.

140. இதைக்கண்ட நம்நபிகள் இதயம் குளிர்ந்தார்கள்
சிதையாத எண்ணத்துடன் சிறுவர்க்கு வேண்டிநின்றார்

141. இறைவா இவர்களுடன் என்றென்று மன்புகொண்டேன்
நிறைவா யிவர்களுடன் நீதானும் அன்பு கொள்வாய்

142. மற்றுமிவர் கிளையார் தம்மீதும் அன்புகொள்வாய்
அற்றேயவர் தம்மோ டன்புகொள்ளும் நல்லவர்க்கும்



143. என்றென்றும் உன்னேசம் உண்டாக இறையோனே
பொன்றிவிடா துன்னருளை என்றென்றும் பொழிவாயே

144. நிறையோனே என்றனையும் நிகரில்லாப் பேரரையும்
கறையின்றி உகப்போரைக் கனிவா யுகப்பாயே.

145. பேரர்களும் நாயகத்தைப் பிரியமாகப் பார்த்தவுடன்
தீராத வேட்கையுடன் திண்டோள் மடிமீதும்

146. ஓடியாடி வந்திருந்து உல்லாசமாய்ச் சிறந்து
வேடிக்கை செய்திடுவர் மேன்மைநபி மகிழ்வார்கள்.

147. மற்றும்பேர ரிருவருமே மாநபிகள் தொழுதிடுங்கால்
குற்றமறி யாதவர்கள் கூர்தோளிற் காலிடையில்

148. உட்கார்ந்தும் நின்றும் உரையாடி விளையாடுவர்
எட்டுணையும் ஒன்றும்சொல்லார் ஏகநபி பரிவினாலே

149. நாளெல்லாம் நீரிரைத்தும் நாயகியார் மாவரைத்தும்
தோளெல்லாம் கடுகடுக்கும் திருக்கைகள் கொப்புளிக்கும்

150. இல்லத் தரசியரே எல்லாவினை களையும்
ஒல்லாது செய்வதனால் உடையாவு மழுக்கேறும்

151. பட்டினியில் கிடப்பார்கள் பன்னாட்கள் யார்வருவார்
திட்டமுடன் வீட்டுவேலை செய்வார்கள் வலியுடனே.

152. இத்தயை முன்மாதிரி இன்றுள்ள பெண்களெல்லாம்
சித்தமுடன் பின்பற்றிடின் சீரிஸ்லாம் செழித்திடுமே.

153. நாயகத்தின் வீட்டினுக்கு நாயகியார் அண்டினார்கள்
தூயநல்ல வேலைக்காரி துணைக்காக வேண்டுமென்றார்

154. அப்போது தூதர்நபி அன்பான மகளழைத்து
எப்போதும் உங்களுக்காம் இறையோனின்
அருளென்றார்

155. அருமை மகளாரே அமர்தன்னில் இறந்தவர்கள்
பெருமை மக்கள்தம்மை பெற்றுவந்தோம்
காப்பாற்ற

156. நாமும் அவர்கள்மீது நளினமாய் நடத்தல்வேண்டும்
சீமானின் அருளெம்மைத் தேடிவரும் கவலாதீர்.

157. அதற்குப் பதிலாக அன்றாடம் படுக்கைக்கு
நிதமும் போகமுன்னர் நீர்மையுட னமர்ந்திருந்து



158. முப்பத்து மூன்றுமுறை முழுமையாய் ஸுபுஹானள்ளா
முப்பத்து மூன்றுமுறை முற்றாயல் ஹம்துலில்லா

159. அல்லாஹு அக்பரென்றே முப்பத்து நான்குமுறை
எல்லாம் ஒழுங்காக இனிதாயே ஓதிடுவீர்.

160. என்றார்க ளுயிர்த்தந்தை என்றுமிது நல்ல தென்றார்
அன்றாடம் செய்துவந்தால் அதுமட்டும் போது மென்றார்

161. இவ்வாறு செய்துவர இறையோனை யவனபியை
செவ்வையாய்ப் பொருந்திக்கொண்டார் தீதறவே
பாத்திமத்தே

162. இறையோனை நாயகத்தை என்றென்றும் பொருந்திக்
கொள்வோம்
நிறைவான இவர்மதிபோல் நினைத்தே நடந்து
கொள்வோம்

163. இல்லாத நிலையிலுந்தான் இரப்போர்க்கே யீந்துவந்தார்
எல்லார்க்கும் வள்ளலென வளமாய் நடந்து கொண்டார்

164. இல்லையில்லை யென்பதில்லை உள்ளததை
யீந்திடுவார்
இல்லில் லில்லா தாயினுந்தான் உள்ளிலுள்ள
தைக்கொடுப்பார்

165. ஈகைநபி நாயகத்தின் இன்மகளார் பாத்திமாவாம்
தோகை மயில் ஈவதிலே ஏகநபிக் கொப்பாவார்

166. தீராத நோயினாலே திகைத்த ஹஸன்ஹுஸைனால்
தேராத தாய்தந்தை தீர்வாக நோன்பிருந்தார்.

167. மூன்றுநாட்கள் நோற்றிடவும் முடிவை யெடுத்தார்கள்
ஆன்றவனி னருளாலும் அருமைநபி பொருட்டாலும்

168. குழந்தைக ளிருவருமே குறையின்றிக் குணமடைந்தார்
வழமைபோல் வாழ்ந்து வந்தார் வல்லோ னருளாலே.

169. கூலிக்கு நூனூற்று கொடுத்தபடிக் கோதுமையை
சாலவுமே சீர்மையுடன் தனியா யரைத்தெடுத்து

170. ஐந்துரொட்டி சுட்டெடுத்தே யருந்த விருக்கையிலே
நைந்தேழை யொருவர் நாடியவன் வந்துநின்று

171. நாயகத்தின் குடும்பத்தாரே நானோ பசிபொறுக்கேன்
நேயமுட னேதேனும் நிறைவாகத் தந்தருள்வீர்.

172. இன்னவொலி கேட்டதுமே உண்ணவைத்த ரொட்டிகளை
அன்னணமே வைத்துவிட்டு அருமைநாயகியைக்கேட்டார்

173. அப்போது நாயகியார் ஐந்துமுழு ரொட்டிகளை
அப்படியே யவர்தமக்குக் கொடுப்போமே என்றார்கள்.



174. அன்றுமுத னோன்பிலுமே அப்படியே பட்டினியில்
பொன்றாது பசியுடனே பொறுத்தே யிருந்தார்கள்.

175. மறுநாளும் ஓரேழை வந்தார் பசியுடனே
மறுக்கா தவர்தமக்கும் மனதார வீந்தார்கள்

176. மறுநாளு மோரேழை வந்தார் பசியுடனே
வெறுக்காத வர்தமக்கும் விருப்பமா யீந்தார்கள்.

177. மூன்றுநாட்க ணோன்பினிலும் முழுமையாய்ப் பட்டினியில்
தோன்றாது மற்றவர்க்குத் துணிவாய்க் கிடந்தார்கள்.

178. இறையோனின் சோதனைக ளிடையிடையே வந்தபோது
குறையின்றி வெற்றிகாண்பார் கோதற்ற மூஉமீன்கள்தாம்.

179. சோதனையில் வெற்றிகண்டோர் சுவனத்தின் சூரர்களாம்
நீதியிறை யூண்கொடுப்பான் நீர்த்தாகம் நீக்கிடுவான்.

180. இறையோனுக் கஞ்சி யினிதே யடிபணிந்து
முறையாக நடந்துவந்தால் முழுதும் கிடைத்திடுமே.

181. அவ்வா றிருந்தார்கள் அருமைநபி யின்குடும்பம்
செவ்வையா யிறையோற்குச் சிரமே பணிந்தார்கள்

182. இறைநாட்ட மல்லா லிசையார்கள் வேறெதற்கும்
மறைநாத ரின்வழியே வாகாய் நடந்தார்கள்

183. பணத்துக்காய்ப் பதவிக்காய் மனந்தன்னை மாற்றவில்லை
கணமேனு மிறைதன்னை கருதா திருக்கவில்லை.

184. இறையோனபி யிருக்கு மிடம்தேடி நாயகியார்
பொறையோடு வருங்காலை புண்(ணி)யநபி எழுந்திருப்பார்

(நாயகியார்: மகளார் பாத்திமா நாயகி)

185. பாத்திமா நாயகியின் பரிவான கரம்பற்றி
தோத்திரமாய் நெற்றியிலே தூயமுத்த மிட்டிடுவார்.

186. மகளாரைக் கூட்டித் தாமிருக்கு மிடம்வந்து
அகலாதிருத்திக் கொள்வார் அன்பான நாயகமே

187. நாயகனின் னாயகரும் நாயகியை நண்ணுகையில்
தூயமக ளெழுந்துநின்று தூயகரம் பற்றிடுவார்.

188. தம்மிருப்பில் தந்தையினை தயவா யிருத்தியபின்
செம்மையாய்ப் பேசுவார்கள் சீரான மகளாரே.



189. என்மகளார் பாத்திமத்தே என்னுடலி லொருபாகம்
என்மகளை வெறுத்தவர்கள் என்னை வெறுத்தார்கள்

190. எம்மகட்குப் பொருத்தமில்லா எப்பொருளும் நான் பொருந்தேன்
எம்மகளை வருத்துவன வெல்லா மெனை வருத்தும்.

191. போர்வையாற் போர்த்திக் கொண்டு போனார்கள் பெருமானார்
ஆர்வமுடன் ஹஸனார் ஆங்கு நபி முன்வந்தார்

192. அவர்தம்மை யழைத்தே யழகாகப் போர்த்திக் கொண்டார்
அவர்தம்பி ஹுஸைனார் அவரையும் போர்த்திக் கொண்டார்.

193. பண்புள்ள பாத்திமா நாயகியும் அலியாரும்
நண்ணியே நாயகத்தின் போர்வையிற் புகுந்து கொண்டார்.

194. இவரைவ ரஹ்லுபைத்கள் என்வீட்டைச் சேர்ந்தவர்கள்
இவர்தம்மைப் பகைத்தவர்கள் என்னையும் பகைத்துக்கொண்டார்.

195. அப்போ திறையி னழகான திருவசனம்
செப்பினார்கள் எம்பெருமான் சீராகக் கேட்டிடுங்கள்

196. இவ்வைவர் தம்மோடு மிசைந்தே நடந்தவர்கள்
எவ்வெவர் தம்மோடு மினிதே யிசைந்திடுவேன்.

197. உங்களிடத் திருந்தே உயர்வான அஹ்லு பைத்தின்
பங்கந்தரு மசுத்தம் பலவற்றை நீக்கினனே.

198. பரிசுத்தப் படுத்திடவே பதிதானும் நாடினனே
அருவான விறையோனே அவ்வாறெடுத் துரைத்தான்.

199. நாயகத் திருமேனி நாடியெங்கும் செல்லுகையில்
தூயமகள் தம்மிடத்தே சொல்லித்தான் செல்வார்கள்.

200. திரும்பி வருகையிலே சீரார்மகள் பாத்திமாவை
விரும்பிச் சென்று பார்த்திடுவார் வீரமுள்ள நாயகமே.

201. பாத்திமா நாயகிக்குப் பாசமுள்ள அலியவர்கள்
நேத்திரம்போ லளித்தார் நேர்தங்க மாலையொன்று

202. கொணர்ந்து கொடுத்ததனால் கோதற்ற தந்தை நபி
உணர்ந்தே யிவண்வந்தேன் உயிரான நன்மகளே

203. இறையோ னிரஸூலின் இனிதான நன்மகளார்
நிறைந்தபணக் காரரைப்போல் நீதமற அணிகின்றார்,



204. என்றுகுறை கூறமக்கள் இசைவீரோ பாத்திமத்தே
என்றலுமே நாயகியார் எழின்மிக்க மாலைதனை,

205. விற்றுப்பண மெடுத்து விலைக்கோ ரடிமையினை
முற்றாக வாங்கிப்பின்னர் முழுதா யுரிமையிட்டார்.

206. அலியார்க்குச் சிறிதுபணம் அனுப்பக் கிடைத்ததனால்
நலமென்னக் கருதி நல்லவெள்ளி வளையல்களும்

207. இரண்டு செய்தே எழிற்கையி லிட்டுக் கொண்டார்
திரையொன்று மிட்டார் திருத்தலை வாயிலுக்கே.

208. அப்போது வெளியூர்க்கு அருமைநபி சென்றிருந்தார்
தப்பாது மகளாரைத் தரிசிக்க வருகையிலே,

209. ஆவலுடன் தந்தையினை அழைக்க விரைந்தார்கள்
பாவையார் காப்பினையும் பறக்கும் திரையினையும்,

210. கண்டார்க ளுடனே கதைக்காது திரும்பிவிட்டார்
கண்கலங்கி யழுதார் கருணைநபி யின்மகளார்

211. அஞ்சியேனோ தந்தை யகன்றார்க ளென்றெண்ணி
சஞ்சலமாய்ச் சிந்திக்கத் தொடுத்தார்க ணாயகியார்.

212. தம்மக்கள் ஹஸனார் ஹுஸைனாரைத் தம்மிடத்துச்
செம்மையுட னழைத்துச் சீர்பாட்ட னாரிடத்து,

213. சென்றிவ் வளையல்களைத் திரையையும் ஒப்படைப்பீர்
என்றார்கள் சுவர்க்கத்தி னினிதான நாயகியார்.

214. சென்றார்க ளிருவருமே சீர்நபிகள் தம்மிடத்தே
பொன்றாத அன்பினாலே பொருந்தி யணைத்தார்கள்

215. மடிமீ திருத்தி மனமார முத்தமிட
கொடுவந்த பொருளைக் கொடுத்தார்கள் தூதரிடம்

216. தூயநபி யெடுத்துத் துண்டாகக் காப்புடைத்து
நேயவேழை மக்களுக்கு நிறைவாகக் கொடுத்தார்கள்

217. திரையைக் கிழித்து சீரான ஸுப்பாவுக்கு
குறையின்றி யணியக் கொடுத்தார்கள் நம்நபிகள்.

218. இருகைகளை யேந்தி இனிதான தம்மகட்கு
இறைவானீ யருள்புரிவாய் இசைவான சுவனத்துளே

219. தகையாடை யீந்திடுவாய் தங்கநகை யளித்திடுவாய்
தொகையான நன்மை யெல்லாம் தொகுத்தே
கொடுத்திடுவாய்



220. என்றிறைஞ்சி னார்கள்நபி எளிதான தம்மகட்கு
அன்றுமென்று மன்புடனே யாதரித்தார் வள்ளல் ரஸுல்

221. பாத்திமா நாயகியார் பணிந்து நடப்பவர்கள்
சாத்தியமா யின்மொழிகள் சரளமாய்ப் பேசுபவர்

222. எளிமையாய் உணவுண்டார் இலகான
உடையணிந்தார்
தெளிவான எளிமையையே தேர்ந்தே
எடுத்துக்கொண்டார்

223. மாவரைப்பார் மனைகூட்டுவார் வடுமிக்கத்
துணிதுவைப்பார்
நோவுற்ற கரங்களினால் நொருங்காடை
தைத்துக்கொள்வார்

224. மாமியார்க் குதவிசெய்வார் மதிமிக்க
மாப்பிள்ளைக்கு
தீமையில்லா முறைகொண்டு திருத்தமாய்
வேலை செய்வார்

225. வேலைசெய்து மெலிந்தும் வேதனையிற் றுன்புற்றும்
ஏழைமனம் கலங்கவில்லை யெளிதாகக்
கொண்டார்கள்

226. பணிப்பெண்ணுடன் சுடுவார்த் தைபகரார் நாயகியார்
பணிவாகப் பணிப்பெண்ணொடு பகர்ந்தே பணிகள் செய்வார்

227. வீட்டுவேலை முடிந்ததுமே விரைவாக நூலெடுத்து
ஓட்டைத்துணி களையும் ஒட்டவே தைத்திடுவார்.

228. இரப்போர்க் களித்திடுவார் இல்லா திருந்தாலும்
சிரமமே பாராது சீருடனே ஈந்திடுவார்.

229. அண்டையிட்ட புடைவைகளை அணிந்தே இருப்பார்கள்
கண்டவர்கள் குறைசாற்றின் கருதாமற் செயற்படுவர்.

230. தன்னைப்போ லொருபிள்ளை தனியாகப் பாதையிலே
உண்ணவு முடுத்திடவும் ஒன்றுமில்லா திருக்கக்கண்டு

231. தந்தையிட மோடிச்சென்று தருமம் கொடுக்கக்கேட்டு
சிந்தையுட னெடுத்துச்சென்று திரிந்த வப்பிள்ளைகண்டார்

232. கண்டவுடன் தருமத்தினை கனிவாயப் பிள்ளையுக்கு
தொண்டெனவே கொடுத்தார்கள் தூயமகள் பாத்திமத்தே.

233. பாத்திமா நாயகியை பார்த்ததில்லை யெவ்வாணும்
பாத்திமா நாயகியும் பார்த்ததில்லை ஆண்களையே.



234. திடமான வடிவத்திலும் திரமான வார்த்தையிலும்
நடையுடை பாவனைகள் நாயகத்தை ஒத்தனகாண்.

235. உண்மையே சொல்லுவதில் உயர்வான பாத்திமத்தை
என்றும்நிக ராரெவரும் என்றார்கள் நாயகமே.

236. அழியாத வழகும் அரிதான வார்த்தைகளும்
எளிதான நடையுடைய முள்ளவர்கள் பாத்திமத்தே.

237. ஊணுறக்க விழிப்பினிலும் உடைநடை பாவனையில்
தீன் நபிக்கு ஒப்பாவார் தீதற்ற பாத்திமத்தே.

238. உண்மை யுரைப்பதிலும் உகநபிக் கொப்பாவார்
பெண்ணின் பெருமையிலும் பிறிதெவரும் ஒப்பாகார்.

239. எளியவராய் வாழ்வதிலே என்றும்பெரும் இன்பம் கண்டார்
தெளிவான இந்நடையில் தீதறவே நடந்து கொள்வார்.

240. எளிதான உணவுகளை எப்பொழுதும் உண்பார்கள்.
களிப்பான வாழ்நாளை கனிவாகக் கழிப்பார்கள்.

241. தந்தைமுடி சூடாமன்னர் தாயாரும் பெரும் வணிகர்
விந்தைமிக்க மகளாரோ வியமான ஏழையராம்.

242. நபியின் குடும்பம் நலிவான வாழ்வதனில்
தபமாக வாழ்ந்தார்கள் தயவாக எப்பொழுதும்.

243. இறுதிநாளை எண்ணியெண்ணி எப்பொழுதும் அஞ்சுவார்கள்

மறுமையின் தண்டனைக்கு மனஞ்சோர்வர் பாத்திமத்தே

244. ஏழைஎளியோர்க்கு இனிதாக வழங்குவதில்

ஞாலத்தில் யாரும்ஒக்கார் நலவான நாயகிக்கு.

245. அங்காடி சென்று அறிவான அலியவர்கள்

சிங்கார ஊண்பொருள்கள் சிலவற்றை வாங்கிவந்தார்

246. அக்காலை யோரேழை யவண்வந்து பசிபோக்க

தக்கதோ ருணவும் தருமாறும் கேட்டுக் கொண்டார்

247. பாத்திமா தம்மிடத்தே பதமாக அலிகூற

காத்துநின்ற ஏழைக்குக் கரவாது கொடுத்தார்கள்.

248. பாத்திமாவே அஞ்சிக் கொள்க பரமன்தனக் கென்று மென்றும்

சாத்தியமாய்ச் செய்யாவிடின் தண்டனைக்கு அஞ்சிக்கொள்க

249. இவ்வாறே மனக்குள்ளே என்றென்றும் சொல்லிக் கொள்வார்.

செவ்வையான பாத்திமத்தே சீரான நாயகியே.

மனதுக்கு: மனக்கு . குறுகிய சொல்



250. மாவரைக்கும் போதினிலே மயக்கமாய் ஆட்டுக்கல்லில்

ஆவதறி யாதுசாய்வார் அன்பான பாத்திமத்தே.

251. கல்விகற்கப் பெண்கள்பலர் கதியாக வருவதுண்டு

அல்லாஹ்வின் குர்ஆனும் அழகுநபி போதனையும்,

252. நல்லாகப் பயிற்றுவிப்பர் நல்லபோத னைகளையும்

வள்ளல்நபி அன்புமகள் அறிவான பாத்திமத்தே.

253. பாத்திமா நாயகியின் பண்பான போதனைகள்

ஏத்தமாய்க் கேட்டிடினே இறையோனின் அருள்சுரக்கும்

254. அயல்பாகத் துள்ளவர்க்கு அழகாக வழங்கிடுங்கள்

மயல்கொள்ளும் இன்பந்தனை மதித்து நடக்காதீர்.

255. மாடமாளி கைகளிலே வாழ்ந்துவந்தோர் எங்குப்போனார்

ஆடம்பரம் விட்டுவிட்டு ஆற்றுங்கள் நல்வினைகள்.

256. கர்வந்தான் மிகவும் கடிய தெனச் செப்பிடுவேன்

இறையோனை மறந்துவந்த இன்பந்தான் மோசஞ்செய்யும்.

257. நற்குணங்கள் சிறந்தவைகள் நல்லகுண முள்ளவர்கள்

எற்றானும் மனமகிழ்வர் என்றும் திருப்திகொள்வர்.

258. பேராசை பொறாமை பெருமை கருவந்தனை

சீராக விட்டுவிட்டுத் திருத்தமாய்த் தூய்மையாவீர்.

259. நாடோறும் நீராடுவார் நல்லவுழூ செய்திடுவார்

நாடிநிற்கும் வுழூவுடனே நாள்தோறு மிருந்திடுவார்.

260. நேற்றுத்தாம் செய்துவந்த நிறைவான வினைகளெல்லாம்

தேற்றமாய் எண்ணிஎண்ணி தெளிவார்கள் பாத்திமத்தே

261. நல்லதனை ஏற்றுக்கொள்வார் நல்லதல்லாச் செயல்களையே

எள்ளளவு மேற்றுக்கொள்ளார் எழிலான பாத்திமத்தே.

262. தம்கையால் தவறிழைப்பின் தாமே திருத்திக்கொள்வார்

சும்மைகளை மனக்குள்வைத்துச் சோராரே பாத்திமத்தே

263. நாணம் கற்பும் நனிபெற்ற அடக்கமதும்

கோணா திருந்த கோமகளோ சீருடையார்



264. சற்றும் கருவமற்ற சாந்திநபி நன்மகளார்

மற்றும்பெண்க ளையொத்து மதிப்போடு நடந்து கொள்வார்.

265. பிறர்தம் மைப்புகழப் பிறவும் விரும்பார்கள்

பொறுப்பான செயல்களையே போற்றி யியற்றுவரே.

266. இயலாதார்க் குதவி இனிதாகச் செய்திடுவர்

வயதுமுதிர்ந் தவர்க்கு மனதாரச் சங்கைசெய்வர்

267. தள்ளாடி நடப்பவரைத் தனிக்கையால் பிடித்துச் செல்வர்

வல்லஇறை யவனை மனமாரப் புகழ்ந்து கொள்வர்.

268. இரவெல்லாம் வணங்கிடுவார் இறையோனைப் புகழ்ந்திடுவார்

இறையோனின் வார்த்தைகளை இனிதாக வியம்பிடுவார்.

269. வேலைகள் செய்திடுவார் விமலனை எண்ணிடுவார்

காலைவரை வணங்கிடுவார் காலெல்லாம் வீங்க நிற்பார்.

270. வாய்மை யுடையவர்கள் தூய்மை யுடையவர்கள்

தாய்மை படைத்தவர்கள் தாமே நபிமகளார்.

271. மாநபி மண்ணில் மறைத்தார்கள் தம்முடலை
தேனான வார்த்தைகளைச் செப்பித்தான் மறைந்தார்கள்

272. அஞ்சிநெஞ்சம் பதைத்தார்கள் அழுதார்கள் நாயகியார்
கொஞ்சமேனும் சலிப்பே குறையா திருந்தார்கள்

273. தந்தையின் அடக்கத் தலம் செல்வார்கள் பாத்திமத்தே
சிந்தை செலுத்திச் சீராக ஓதுவார்கள்.

274. மறைவின் போது மாநபிதன் மகளுக்கு
உரைத்தார்க ளழைத்து உண்மைநபி தம்மிறப்பை.

275. அழுதார்கள் நாயகியார் அப்போது சொன்னார்கள்
அழவேண்டாம் எனக்குப்பின் அணித்தே வருவீர்கள்.

276. இதுகேட்டுச் சிரித்தார்கள் இறையோனின் நாட்டமதால்
துதித்தார்கள் துன்புற்றார் துணிவான நாயகியார்.

277. தந்தையின் இறப்புக்குத் தனியாறு மாதத்தின்பின்
விந்தையாக நாயகியும் விரைந்தே இறந்தார்கள்.

278. மாதம் ரமழானில் மணமான பகல்வேளை
தூதர்மகள் நோய்வாய்ப்பட்டார் சோர்ந்தே இருந்தார்கள்



279. புனலாடிப் பின்னர் புத்தாடை யணிந்தார்கள்
தனியான படுக்கையினை தன்வீட்டில் விரித்தார்கள்.

280. கிபுலாவுக்கு முகந்திருப்பிக் கிடைப்பாட்டாற் படுத்தார்கள்
கனமுற்ற வலக்கரத்தை கன்னத்தில் வைத்தார்கள்.

281. இப்போ தெனக்கு இறப்புத்தான் வருமென்று
செப்பினார்கள் தேவமாது சீரான குரலினிலே.

282. சொல்லிய வக்கணமே தூதர்மகள் மறைந்தார்கள்
எல்லாருந் துன்புற்றார் இதனாலே துயருற்றார்.

283. மூன்றாம் திகதி முறையான றமழானில்
ஆன்ற செவ்வாய் அழகாய் மறைந்தார்கள்

284. பாத்திமா நாயகியார் பதிபாதம் அடைகையிலே
பூத்தவய திருபதோடு பூரணமாய் ஒன்பதுமாம்.

285. இருபத்து நான்கென்பர் இருபத்து ஐந்தென்பர்
கருத்துப்பேதம் உண்டாதல் காண்போமே நூல்களிலே

286. மறைந்தார்கள் மறைந்தார்கள் மாண்புடனே மறைந்தார்கள்
இறையவன் தன்னிடத்தே மறைந்தார்கள் நாயகியார்

### (இறைஞ்சுதல்)

287. இறையோனே யெம்மை யெப்பொழுதும் காத்திடுவாய்
நிறைவான சுகந்தன்னை நித்தமுமே தந்திடுவாய்

288. எங்கள் தாய் தந்தையரை என்றென்றும் காத்திடுவாய்
மங்காத வாழ்வதனை மனமார ஈந்திடுவாய்.

289. அண்ணன்தம்பி மார்களுக்கும் அழகான வாழ்வளிப்பாய்
கண்ணெணவே காத்திடுவாய் கதியாக நின்றிடுவாய்.

290. எம்பிள்ளை குட்டிகட்கும் நம்மவர்க்கும் வாழ்வளிப்பாய்
செம்மையுள்ள செழிப்பதனை சீராக ஈந்திடுவாய்.

291. குறையில்லாச் செல்வந்தனை குவையாகத் தந்திடுவாய்
நிறைவான ஞானந்தன்னை நித்தமுமே ஈந்திடுவாய்.

292. மறையின் அறிவுதனை மறைக்காதே ஊட்டிடுவாய்
கறையில்லா நபிமொழியை கற்றிடவே அருள்புரிவாய்

293. எங்கள் மனைவியரை எப்பொழுதும் காத்திடுவாய்
மங்களமாய் வாழவைப்பாய் வலிமிக்க இறையோனே



294. நோய்துன்பம் வாராமல் பேயாட்டம் வாராமல்
தாய்மையருள் தந்திடுவாய் தனியோனே திரளோனே.

### (பாதுகாத்தல்)

295. இறைமறையின் ஊடுள்ள இறையோனி னெதிரிகளை
மறைவா யெதிர்த்துவரும் வன்குபிரை அழித்திடுவாய்

296. மார்க்கத்தின் எதிரிகளை வளமின்றி ஆக்கிடுவாய்
சீர்கெட்டு நோயுற்றுத் திரமின்றிச் சாகவைப்பாய்

297. அல்லாஹ்உன் எதிரிகளை இல்லாதே ஆக்கிடுவாய்
நல்லாரைக் காத்திடுவாய் நலமாக வாழ்த்திடுவாய்

298. மார்க்கத்து ளிருந்துகொண்டு மார்க்கமுரண் பேசுவோரை
தீர்க்கமா யழித்திடுவாய் மதிமிக்க இறையோனே.

299. தீயபெரும் சக்திகளின் தீமைகள் பலநின்றும்
தூயவரா யெமையாக்கு தூயோனே உன்காப்பு.

300. வக்காபிக் கூட்டத்தின் வழிதவறும் மதமிருந்து
இக்லாஸாய் எமைக்காப்பாய் இறையோனே வலியோனே.

301. எங்களிந்தக் கோரிக்கையை எப்பொழுது மேற்றுக்
கொள்வாய்

சிங்கம்போல் துள்ளுவோரை சீக்கிரமே சாகடிப்பாய்.

302. எம்பிள்ளை ஜமாலின் மனைவியவர் கேட்டுக்கொண்ட

நம்முயிரின் மேலான நாயகியார் பாத்திமத்தின்,


303. திருச்சரிதம் பாடினேனே தினமுமவர் பாடுதற்கு

சிறப்புமிக்க இறையோனே சீர்படுத்தித் தந்திடுவாய்.

304. இவர்குடும்பம் செல்வத்துடன் இனிதாக வாழ்கவாழ்க

இவர்ந்து நீடூழி இனிதாக வாழ்க வாழ்க.

**(முற்றும்)**



# பாத்திமா நாயகியார் மாலை

ஆக்கம் :
ஜமாலிய்யா அஸ்ஸய்யிது
கலீல் அவ்ன் மௌலானா
அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

வெளியீடு :
அவ்னிய்யா பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
திருச்சி

பாத்திமா நாயகியார் மாலை
ஆக்கம் :
ஜமாலிய்யா அஸ்ஸய்யிது
கலீல் அவ்ன் மௌலானா
அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்
வெளியீடு :
அவ்னிய்யா பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
திருச்சி